திண்டுக்கல் மாவட்டத்தில்

2004 பயனாளிகளுக்கு ரூ.7.05 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர்கள் இ.பெரியசாமி - அர.சக்கரபாணி வழங்கினர்

திண்டுக்கல், மே.11-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், "ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி" நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்,

2004 பயனாளிகளுக்கு ரூ.7.05 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் வழங்கினர்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் "ஈடில்லா ஆட்சி 2 ஆண்டே சாட்சி" பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ச.விசாகன், தலைமையில் நேற்று முன்தினம் 9.5.2023 அன்று நடைபெற்றது.

விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் கலந்துகொண்டு, 2004 பயனாளிகளுக்கு ரூ.7.05 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினர். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ஊரக வளர்ச்சித்துறையில் கருணை அடிப்படையிலான நியமனம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆடு, மாடு கொட்டகை அமைத்தல் திட்டத்தில் 63 பயனாளிகளுக்கு ரூ.1.10 கோடி மதிப்பிலும், வருவாய்த்துறை சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி, இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 1089 பயனாளிகளுக்கு ரூ.70 இலட்சம் மதிப்பிலும், ஊரக வளர்ச்சித்துறை(வாழ்ந்து காட்டுபோம்) இணை மாநிய திட்டத்தில் 11 பயனாளிகளுக்கு ரூ.34.02 இலட்சம் மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.80.50 இலட்சம் மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர், தோட்டக்கலைத்துறை சார்பில் நுண்ணீர் பாசன திட்டத்தில் 10 பயனாளிகளுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பிலும், வேளாண்மைத்துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.30,268 மதிப்பில் பண்ணைக்கருவிகள், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் 100 பயனாளிகளுக்கு ரூ.8.04 இலட்சம் மதிப்பில் மின்னணு குடும்ப அட்டைகள், சமூக நலத்துறை சார்பில் 40 பயனாளிகளுக்கு ரூ.3.92 இலட்சம் மதிப்பில் தையல் இயந்திரங்கள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.1.96 இலட்சம் மதிப்பில் தையல் இயந்திரங்கள், தொழிலாளர் நலத்துறை சார்பில் 48 பயனாளிகளுக்கு ரூ.3.64 இலட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகை, ஊரக வளர்ச்சித் துறை சார்பில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிதியில் வேளாண் கருவி வங்கி அமைத்தல் திட்டத்தில் 162 பயனாளிகளுக்கு ரூ.92 இலட்சம் மதிப்பிலும், கூட்டுறவுத்துறை சார்பில் சிறு வணிக கடன் 350 பயனாளிகளுக்கு ரூ.2.41 கோடி மதிப்பிலும், மாவட்ட தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தில் 2 பயனாளிகளுக்கு ரூ.45.30 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் 2004 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.7.05 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

அமைச்சர் இ. பெரியசாமி பேச்சு

விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று 2 ஆண்டுகள் ஆன நிலையில் குடிநீர், சாலை வசதி, கல்வி மேம்பாடு என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் 2 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாநகராட்சி பகுதிக்கு புறநகர் பேருந்து நிலையம் விரைவில் வரவுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 5 பவுன் நகைக்கடன் தள்ளுபடி திட்டத்தில் ரூ.5000 கோடி வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தகுதியுள்ள அனைவரும் பயன்பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.12,410 கோடி மதிப்பிலான விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

70,000 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது!

அதேபோல் மகளிர் சுய உதவிக்குழு கடன் ரூ.2,755 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையில் ரூ.20,000 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அதோடு மட்டுமின்றி கடந்த 2 ஆண்டுகளில் ரூ.14,000 கோடி மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கூட்டுறவுத்துறையில் வாடிக்கையாளர்களின் வைப்புத்தொகை ரூ.70,000 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பெரும் முயற்சியாலும், பள்ளிக்கல்வித்துறையின் சிறப்பான செயல்பாடுகள், ஊக்கப்படுத்துதல், உற்சாகப்படுத்துதல் காரணமாக கல்வித் தரத்தில் திண்டுக்கல் மாவட்டம் 21வது இடம் பிடித்துள்ளதற்கு அனைவருக்கும் பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதல்வர் பதவியேற்றபோது, கொரோனா தொற்று அதிகளவில் இருந்தபோதும், 8 கோடி மக்களின் உயிர்களை பாதுகாக்க அதிகமான உழைப்பை வழங்கிய முதல்வராவார். செய்ய முடியாதவைகளையும், செய்து முடிக்கும் முதல்வர் நமது முதல்வர் ஆவார். ஏழை, எளிய மக்களின் தேவைகளை அலுவலர்கள் அறிந்து அவர்களுக்கு தேடிச்சென்று உதவிகளை வழங்கிட வேண்டும்.

தமிழகத்தில் கல்வித் துறையை மேம்படுத்துவதற்காக அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் அவர்களது நினைவாக பள்ளி கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.823 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 5,500 பள்ளிகளில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல் அரசு பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவு திட்டம் அனைத்து பள்ளிகளிலும் வரும் ஜூன் மாதம் முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழகத்தில் 10,000கிலோ மீட்டர் தூரம் சாலைகளை சீரமைக்க ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில், திண்டுக்கல் மாவட்டத்திற்கு ரூ.135 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2016-2021 வரையிலான 5 ஆண்டு கால கட்டத்தில் 2.70 இலட்சம் வீடுகள் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 2021 முதல் 2 ஆண்டுகளில் 2.20 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய ஆட்சியின் சிறப்பான செயல்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஏழை, எளிய தாய்மார்கள் தங்களது குழந்தைகளை சிரமமின்றி பள்ளிக்கு அனுப்ப வசதியாக காலை உணவு திட்டத்தினை தொடங்கி செயல்படுத்தி வருகிறார். கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பல திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள் என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு

விழாவில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணிபேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை திறம்பட செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றியதோடு, சொல்லாத பல திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்தார். எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சத்துணவுடன் வாரம் 5 முட்டைகள் வழங்கும் திட்டத்தை கொண்டுவந்தார்.

தற்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும்திட்டத்தைகொண்டு வந்துள்ளார். இந்தத் திட்டம் வரும் ஜூன் 1ஆம் தேதி முதல் மாநிலம் முழுவதும் அனைத்து அரசு பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும்மாணவ, மாணவிகளுக்கு செயல்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விபத்தில் சிக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் வகையில், இன்னுயிர் காப்போம் 48 என்ற திட்டத்தை அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, விபத்தில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு முதல் 48 மணி நேரத்திற்கு அளிக்கப்படும் சிகிச்சைக்கு ஆகும் செலவை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவர்களுக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.1500ல் இருந்து ரூ.2000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2 கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கும் பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 36 இலட்சம் பயனாளிகள் முதியோர் உதவித்தொகை பெற்று வருகின்றனர். நடப்பு ஆண்டில் ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

ரெட்டியார்சத்திரம், வேடசந்தூர், வடமதுரை மற்றும் திண்டுக்கல் ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.512.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்ற தொகுதிக்கு குடிநீர் திட்டங்கள் செயல்படுத்த ரூ.930 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அதேபோல், நிலக்கோட்டை, ஆத்தூர், நத்தம், சாணார்பட்டி, குஜிலியம்பாறை பகுதிகளுக்கும் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு, கூட்டுறவுத்துறை சார்பில் ஒரு கல்லூரி, உயர் கல்வித்துறை சார்பில் 2 கல்லூரிகள், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் ஒரு கல்லூரி தொடங்கப்பட்டுள்ளன. ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு சித்தா கல்லூரி, கூட்டுறவு மேலாண்மை பயிற்சி மையம் ஆகியவை தொடங்கப்படவுள்ளன. போட்டித் தேர்வுக்கு தயாராகி வரும் மாணவ, மாணவிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒட்டன்சத்திரத்தில் பயிற்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது. அதற்கு காளாஞ்சிப்பட்டியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனை, பழனிக்கு மாற்றப்பட்டதையடுத்து பழனி அரசு மருத்துவமனையில் ரூ.24 கோடி மதிப்பீட்டில் 9 மாடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. ஆத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் தொகுதிக்கு 2 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் மூலம் பல்வேறு வசதிகள்!

தமிழகம் முழுவதும் நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு 1700 கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில், திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 172 நியாய விலை கடைகள் புதிதாக துவக்கப்பட்டுள்ளன. அதில் முழுநேர நியாய விலைக்கடைகள் 51, பகுதி நேர நியாயவிலைக் கடைகள் 114, நகர கடைகள் 7 என மொத்தம் 172 கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த கடைகளுக்கு விரைவில் சொந்த கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நியாயவிலைக் கடைகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி தமிழகத்தில் ஆட்சி பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் 14,25,000 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டத் தில் 48,864 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது புதிய குடும்ப அட்டைகள் பெறவும், தொலைந்து போனால் புதிய குடும்ப அட்டைகள் பெறவும் ஆன்லைன் மூலம் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வராமல் இசேவை மையங்கள் மூலம் ரூ.45 செலுத்தி புதிய குடும்ப அட்டையை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் திட்டமும் துவக்கப்பட்டுள்ளது. புதிய குடும்ப அட்டைகள் தபால் அலுவலகம் மூலம் உங்கள் வீட்டிற்கு நேரடியாக வந்து சேரும். குடும்ப அட்டைதாரர்களுக்கு தரமான அரசி, பருப்பு உள்ளிட்ட குடிமைப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதில் பயோமெட்ரிக் தொழில் நுட்பத்தில் கைரேகை பதிவில் உள்ள இடர்பாடுகளை தீர்க்க கண் கருவிழி பதிவு கருவி பயன்பாட்டு முறை விரைவில் செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதன் மூலம் தொழில்துறையில் 14வது இடத்தில் இருந்த தமிழகம் தற்போது 3வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. இது போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வருங்காலங்களில் ஆதரவு தர வேண்டும் என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

முன்னதாக கூட்டுறவுத் துறையின் சார்பில் தொப்பம்பட்டி மற்றும் பித்தளைப்பட்டி பகுதி நியாயவிலைக் கடைகளுக்கு "கியூஆர்" கோடு முறையில் பணம் செலுத்தும் வசதியை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இவ்விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி வே.லதா, உதவி ஆட்சியர்(பயிற்சி) செல்வி பிரியங்கா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.தில கவதி, மாவட்ட ஊராட்சித் தலைவர் மு.பாஸ்கரன், திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் எஸ். ராஜப்பா, மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் கா.பொன்ராஜ், மாநகராட்சி ஆணையாளர் திருமதி ஆர்.மகேஸ்வரி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் இராமகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) இரா.அமர்நாத், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், முக்கிய பிரமுகர்கள் சத்தியமூர்த்தி, நெடுஞ்செழியன், தண்டபாணி, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (10.5.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில், வன்கொடுமைகள் வழக்குகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், காவல்துறை தலைவர் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் எஸ்.பிரபாகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் தெற்கு ஒன்றியம் திருவாதவூரில் நடைபெற்ற கழக அரசின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றிய போது எடுத்தபடம். உடன் மாவட்ட பொருளாளர் சோமசுந்தரபாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கரு.தியாகராஜன், வடிவேல்முருகன், ஒன்றிய செயலாளர் பிரபு, அணி அமைப்பாளர் வக்கீல் கலாநிதி மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமை! ஆ.இராசா எம்.பி,அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில்

மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவர் ரெ.தங்கம்-சரிதா இல்ல விழா!

அமைசர் சிவ.வீ.மெய்யநாதன், கே.கே.செல்லபாண்டியன்,டாக்டர் வை.முத்துராஜா, எம்.எம்.அப்துல்லா பங்கேற்பு!

புதுக்கோட்டை, மே 11-

புதுக்கோட்டை மாவட்டம்,ஆலங்குடி தாலுக்கா, கீழாத்தூர் கிராமத்தை சேர்ந்த தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம்-சரிதா தங்கம் இல்ல காதணி விழா ஆலங்குடி ஸ்ரீகுரு ராகவேந்திர திருமண மஹாலில் 14.5.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும்,கழக முதன்மைச்செயலாளர் கே.என். நேரு தலைமையில்

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்பி, முன்னிலையில் காதணி செல்வங்கள் அஞ்சுகம் தங்கம், கயல்விழிதங்கம், வகுலாதேவி (எ) தனலெட்சுமி ஆகியோருக்கு காதணி விழா நடைபெறுகிறது.

விழாவில் தெற்கு மாவட்ட கழக மாவட்ட கழக செயலாளரும் சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வரவேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., எம்.எம். அப்துல்லா எம்.பி., காசி. முத்துமாணிக்கம், திருச்சி வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி ந.தியாகராஜன் எம்.எல்.ஏ., சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி, என். சின்னத்துரை எம்.எல்.ஏ., எஸ்.டி.ராமச்சந்திரன் எம். எல்.ஏ., மேயர் மு.அன்பழகன், பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுக மீனாட்சி, த.சந்திர சேகரன், அரு.வீரமணி, கேஆர்என்.போஸ், எம். எஸ்.அசோக்பாண்டியன், பி.டி.அரசகுமார், சுபா.மதியரசன், எஸ்ஆர்.அண்ணாமலை, எஸ்.ராமச்சந்திரன், கேபிகே.டி.தங்கமணி, ஜெயலெட்சுமிதமிழ்செல்வன், திலகவதிசெந்தில், மாவட்ட அரசு பொது வழக்கறிஞர் பா.வெங்கடேசன், வீரபாண்டி டாக்டர் ஆ.பிரபு, திருச்சி கேஎம்டி. விஸ்வா, வீர.சரவணன், ஏ.பழனிக்குமார், கேசி. சிவக்குமார், ஆர்.ரெத்தினவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கீரை.தமிழ்ராஜா, ஆகியோர் பங்கேற்று குழந்தை செல்வங்களை வாழ்த்துகின்றனர்.

மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், ரீதேவி அண்ணாதுரை, அபுதாஹிர், பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன் எஸ்எஸ்.கருப்பையா, எம்.லியாகத்அலி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.எஸ்.ரவி, அரு.வடிவேலு, உதயம் சண்முகம்,சக்தி ராமசாமி,சீனியார் என்ற முகமது அப்துல்லா, அழகு சிதம்பரம், பொன். ராமலிங்கம், ஆர்.கணேசன், வி.ஆர்.இளையராஜா, பொன்.துரை, அடைக்கலமணி,முத்து, பொன்.கணேசன், எல்.குமார் என்ற துரைக்கண்ணு, க.ராஜேந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.சாமிநாதன், தமிழ்.அய்யா, எம். பரமசிவம், என்.சேட்டு, ஒ.எஸ்.வெங்கடாசலம், கே.எஸ்.சந்திரன், ஆர்ஆர் எஸ்.மாரிமுத்து, முபிமா. சந்தியசீலன், ஆர்.இளஞ்குமரன், வே.முத்து கிருஷ்ணன், கேபி.அய்யப்பன், தவ.பாஞ்சாலன்,

தெற்கு, வடக்கு பேரூர் கழக செயலாளர்கள் ஆ. செந்தில், அ.அழகப்பன், பி.அண்ணாத்துரை, உ.முருகேசன், வீ.விஜயகுமார், எம் எஸ்.அக்பர்அலி,

ஒன்றிய பெருந்தலைவர்கள்: கேபிகே.டி.வள்ளியம்மைதங்கமணி, மகேஷ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மாலா ராஜேந்திர துரை, சுதாஅடைக்கலமணி, ராசிமுருகானந்தம், உமதேவி, சுந்தரிஅழகப்பன், மாரிக்கண்ணு முத்துக்குமார்,பி.சீனிவாசன்,

மாவட்ட பிரதிநிதிகள்: கேவிஎஸ்.ஏ.மோகன், ஏ.அருளானந்தம், எம்ஜி. என்ற ஆர்.ராமச்சந்திரன், ச.முருகன், ஆர்.நாராயணசாமி, வீர.மெய்யர், என். சங்கர்,எம்.முருகன், கி.வீரப்பன், சுப.மணிமொழியன், ஆதி.கருணாநிதி, இரா. நிறைவு அண்ணா, சுப.சண்முகநாதன், டி.மகேஷ்வரன், கே.கணேசன், ஐ.லூர்துநாதன், கேஆர்.வெள்ளைச்சாமி, எல்.கணேசன், எம் எஸ்கே.சின்னராஜா, க.ரமேஷ், போடி.காமராஜர், துரையூர்.அ.பாஸ்கரன், கம்பம் சாதிக், கேபிகே. பனையப்பன்,

கேபிகே.டி.பாஸ்கர், சரவெடி சரத்பாலா, நாகூர் ஒய்.ஹாஜாசாஹிப் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

செ. கந்தப்பன்
மே 11 (1990)

கழக கொள்கை விளக்க அணிச் செயலாளராகவும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றியபோதுதான் கிராமங்கள்தோறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன.

1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரில் பங்கேற்று சிறை சென்றார். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"ஆழ்ந்த அரசியல் ஞானமும், அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும், கழகம் காப்பதில் கடமை உணர்வும் என்னை "அண்ணே" என்று அழைக்கும்போது ஒரு வற்றாத பாசமும் – கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்" என தலைவர் கலைஞர் குறிப்பிட்டு போற்றியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.